# சத்திய வேத பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு
(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)

**காவலன்**
சந்தாதாரரின் கவனத்திற்கு

| | | |
|---|---|---|
| வருட சந்தா | ரூபா | 9-00 |
| 6 மாத | ,, ,, | 4-50 |
| 3 மாத | ,, ,, | 2-25 |

(தபாற் செலவு உட்பட)

95-ம் புத். | 1970-ம் ஆண்டு ஆவணி மாதம் 1-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 28-ம் இல.


# அரசியல் நிர்ணயசபை நிறுவ

## ஏக மனதான முடிவு

இவ்வருடம் ஆடிமாதம் 19-ம் திகதி இலங்கைச் சரித்திரத்திலே அதி முக்கிய நாளாக இடம் பெறுவது திண்ணம். அன்று கொழும்புமாநகரில், நவரங்கல மன்றத்தில் இலங்கைப் புதிய பிரதம மந்திரியாகிய திருமதி சிறிமா பண்டாரநாயகா அம்மையாரின் அழைப்பின் காரணமாக ஒன்றுகூடியிருந்த ஆட்சி மன்ற உறுப்பினர் முன்னிலையில் பிரதம மந்திரி அவர்கள் நமது நாட்டின் தேவைக்கும் கலாச்சாரத்துக்கும் உகந்த ஒரு புதிய அரசியல்திட்டத்தை வகுக்க ஆட்சிமன்ற உறுப்பினர் யாவரும் அடங்கிய ஓர் அரசியல் நிர்ணயசபையை நிறுவப் பிரேரணை சமர்ப்பித்தார். மூன்று நாள் விவாதத்தின் பின்பு இந்நாட்டு ஆட்சி மன்றத்தினர் யாவரும் ஏகமனதாக அதைஏற்றுக்கொண்டனர். இம்மாதம் 29-ம் திகதி தொடக்கமாக இச்சபை இவ்வேலையை ஆரம்பித்து ஓர் அரசியல் திட்டத்தை உருவாக்கி நமது நாட்டை ஒரு ஜனநாயகக் குடியரசாகப் பிரகடனம் செய்ய அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றது. விவாதத்தின்போது பிரதமர் ஆற்றிய சொற்பொழிவில் இந்நாட்டு மக்கள்யாவருக்கும் மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் ஊட்டும் உறுதிமொழிகள் கொடுத்திருக்கின்றார். "இந்நாட்டில் உள்ள பல இன மக்களும் ஒரே தேசத்தவர்களாக ஒற்றுமையுடன் வாழ வழி வகுப்போம்" என கூறினார் பிரதமர்.

## அமலோற்பவ தியாகிகளின் வேலையைப் பாப்பரசர் மெச்சுகிறார்

இவ்வருடம் வைகாசி மாதம் 18-ந் தேதி பரி. தந்தையின் குருத்துவ வைர யூபிலிச் சோபனங்களை இலங்கை மக்களின் சார்பில் கருதினால் கூறே அடிகளின் தலைமையில் இலங்கையர் குழுவொன்று பரி. தந்தையை நேரில் பேட்டிகண்டு சமர்ப்பித்த போது 6-வது சின்னப்ப தந்தை இலங்கைமக்களுக்குத் தமது விசேஷ அன்பையும் ஆசீர்வாதத்தையும் அருளினார். அவரைத் தரிசித்த குழுவினரில் இலங்கையின் அமலோற்பவ தியாகிகளின் தலைவராகிய வண. சிமித் சுவாமியாரும் இருந்தார். சுவாமியார் பரி. தந்தைக்குஅறிமுகம் செய்யப்பட்டதும் பாப்பரசர் முகத்தில் விசேஷ மகிழ்ச்சி தோன்றியது. அமலோற்பவதியாகிகள் இலங்கையிலே திருச்சபையின் வளர்ச்சிக்கு உதவிவரும் சரித்திரத்தைப் பாப்பரசர் நன்கு அறிந்திருக்கின்றார் என்பதை அவரது வார்த்தைகள் விளக்கின. பல சம்பவங்களையும் பற்றி அவர் சிமித் சுவாமியாரை விசாரித்து, அமலோற்பவ தியாகிகள் யாவருக்கும் தமது விசேஷ ஆசீர்வாதத்தை நல்கியருளினார்.

## ஒல்லாந்துதேசக் கருதினால் அல்பிறிங்க் பாப்பரசரைச் சந்தித்தார்

ஒல்லாந்துதேசத்தின் திருச்சபையில் குருபணி செய்துவரும்பலர்குருமார் கட்டாயமாக விரத்தத்துவநிலையை அனுசரிக்க வேண்டுமென்பதை நீக்கி விட வேண்டுமென்ற வேண்டுகோளைப் பரிசுத்த தந்தைக்கு தங்கள் கருதினாலாகிய அல்பிறிங்க் அடிகளார் ஊடாக அனுப்பி வைத்ததையும் அதற்குப் பரிசுத்த தந்தை 6ஆவது சின்னப்ப பாப்பரசர் திட்டவட்டமாக மறுத்து விட்டதையும் வாசகநேயர் அறிவர். இப்படி மறுத்த பின் முதன் முறையாக அல்பிறிங்க் அடிகளார் சென்றவாரம் பாப்பரசரை வத்திக்கான் சென்று சந்தித்தார். பாப்பரசரும் கருதினாலடிகளும் பல நிமிஷமளவில் தனிமையாக விஷயங்களைக் கலந்து ஆலோசித்தனர். பரஸ்பர அன்புநிறைந்த சம்பாஷணையாக இருந்தது என்றும் ஒல்லாந்துதேச திருச்சபையில் பரபரப்புக்குரிய நிலைமை ஏற்பட்டிருப்பதாகத் தோன்றவில்லையெனவும் அவதானிகள் கூறினர்.

## பரீஸ் நகர கருதினால் மாட்டியின் முன்மாதிரி

சில வாரங்களுக்குமுன் தென் அமெரிக்க கண்ட பிறெசில் தேச அதிமேற்றிராணியார் ஹெல்டர் கமரு அடிகளார் பிரான்சு தேசத்திலும் மறு மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் சுற்றுப்பிரயாணம் செய்து பின் தங்கிய நாடுகளுக்கு உதவுவது செல்வம் படைத்த நாடுகளுக்கு தேவனாலிடப்பட்ட பொறுப்பு என எடுத்துக் கூறிவந்தார். ஹெல்டர் அடிகளாரின் போதகங்கள் வீண்போகாது பிரான்சுதேச மக்கள் வறிய நாடுகளுக்கு உதவ முன்வரவேண்டுமென்று காட்டுவதற்காக கருதினால் மாட்டி அவர்கள் தனது மாளிகையிலுள்ள பாரம் பரியம் படைத்த பழைய தளவாடங்களைச் சென்ற மாதம் பகிரங்கமாக ஏல விற்பனையில் விற்று அதனால் கிடைத்த 18,000 டலர் பெறுமதியான பணத்தை ஹெல்டர் அடிகளாருக்கு அனுப்பிவைத்திருக்கின்றார்.

## வால்ஷ் அடிகளாரின் விடுதலை

சீனாதேச ஷாங்காய் நகர மேற்றிராணியாராயிருந்து, பின் 12 வருடகாலம் மறியலிலிடப்பட்டு அண்மையில் விடுதலையடைந்த அமெரிக்க இனத்தவராகிய வால்ஷ் அடிகளாரின் விடுதலையைப் பற்றி பெரு மகிழ்ச்சியுடன் சென்றவாரம் பரிசுத்த தந்தை வழக்கமாக அளிக்கும் வாராந்த பகிரங்கப் பேட்டியிற் குறிப்பிட்டார். "வாலஷ் அடிகளாரின் விடுதலை பெரு மகிழ்ச்சிக்குரியது அவரது மறியற்காலம் முடியுமுதலே கொம்யூனிஸ்த அதிகாரிகளால் அவர் விடுவிக்கப்பட்டது வருங்காலத்துக்குச் சற்று நம்பிக்கை அளிக்கின்றது" என்று பரிசுத்த தந்தை கூறி அவ்வடிகளாரது சீவியத்தின் சிறந்த அர்ப்பணத்தைக் கண்டுபாவிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

## இலங்கை 'சிநொட்' முடிவுகளுக்கு வத். அங்கீகாரம்

இலங்கைத் தேசிய சிநொட்டின் முடிவுகளைச் சென்றவருடம் கருதினால் கூறே அடிகள் வத்திக்கானுக்கு அனுப்பியிருந்தார். அங்கே அம் முடிவுகள் பரிசீலனை செய்யப்பட்டு சில சிறு திருத்தங்களுடன் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. இதனபயனாக விரைவில் இலங்கையில் கையாளப்பட வேண்டிய கருமங்களை மேற்றிராணிமார்சபை ஆராய்ந்துவருகின்றது.

## கலகத்தின் நடுவில் சமாதானம்

வட அயர்லாந்தில்கத்தோலிக்கருக்கும் புறொட்டஸ்தாந்து மதத்தவருக்குமிடையில் சென்ற பல மாதங்களாக இடையிடையே கலகங்களும் கைகலப்புக்களும் நடந்துவருவதை நேயர்கள் அறிவர். கத்தோலிக்க திருச்சபை அதிகாரிகளும் அங்குள்ள மறு கிறிஸ்தவ சபை அதிகாரிகளும் இக்கலகங்கள் நடவாதிருக்க பலவகைப்பட்ட முயற்சிகளும் எடுத்து வந்தபோதிலும் சித்தியடையவில்லை. அண்மையில் அவர்கள் எடுத்த முயற்சி ஒன்று குறிப்பிடத்தக்கது. சகல கிறிஸ்தவ சபைகளும் அடங்கிய ஒரு நிர்வாக குழுவினரால் ஒரு கூட்டமாக 100 இளைஞர்கள் திரட்டப்பட்டு உல்லாசப் பிரயாணம் சென்று ஒரு கூரையின்கீழ் ஒரு வாரம் சீவித்தனர். இந்த 100 இளைஞரும் பல கிறிஸ்தவ சபைகளுக்கும் சேர்ந்தவர்கள். முந்திய வாரம் ஒருவர் ஒருவரோடு கைகலந்துகொண்ட இவர்கள் கூட்டுச் சீவியத்தின்போதும் அதன் பின்பும் நடந்துகொண்ட நல்ல முறை பெரும் வியப்பை உண்டுபண்ணியிருக்கிறது:

**"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊக்கமிகு காக்கிகள் போக்கு

இவ்விருபதாம் நூற்றுண்டைக் 'காக்கியின் நூற்றுண்டு' என்று கூறுமளவிற்கு காக்கிகளின் புகழ் ஓங்கியுள்ளது. ஆஸ்பத்திரி வாசல் முதல் அலரிமாளிகை வாசல்வரை அவற்றின் புகழ் வளர்ந்துள்ளது. ஏன்தான் இத்துணை புகழ் என்ற ஏக்கமா? ஏக்கம் போக்க கட்டுரையைப் படியுங்கள்.

இந்தக் காக்கி இருக்கிறதே, அதற்கு இருக்கும் மதிப்பும் மரியாதையுமதான் எவ்வளவு! சாதாரண மனிதன் ஒருவன் இந்தக் காக்கிக்குள் புகுந்துவிட்டால் அப்பப்பா அவனுக்கிருக்கும் மதிப்பை மதிப்பிட முடியுமா? நமது பொலிஸ் புலிகள் இருக்கின்றார்களே பொலிஸ் என்று கூறவே பயமாயிருக்கிறது. எந்தநேரமும் கண்ணில் எண்ணெய்ஊற்றியபடி ரோந்து சுற்றுவர். இந்தக் காக்கியைக் கண்டதும் வழித் தெருவிலே நடக்கும் தவறுகள் கூடக் காக்கி மறையும்வரை நடவாதிருக்கும், போக்குவரத்துச் சட்டத்தை மீறும் சாரதிகளும் பாதசாரிகளும் இந்தக் காக்ககள் மட்டில் எவ்வளவு விழிப்பாயிருக்கின்றனர்.

அரசாங்கத்தின் முப்படைகள் இருக்கின்றன அல்லவா? அவற்றில் இந்த இருபடைக்கும் காக்கிகள்தான் ஊக்கமளிக்கின்றன. கரையோரப் பகுதிமக்களைக் கலங்கவைக்கிறது. கண்ணில் கண்டாலே போதும். நமது இ. போ. ச. சாரதிகளும்; கண்டக்டர்களும் இருக்கிறார்களே, எப்படியோ இந்தக் காக்கிக்குள் புகுந்துவிட்டனர். அப்பாவிகளான சாரதிகளுக்கு இந்தக் காக்கிகள் ஒன்றும் செய்யவில்லை. ஆனால் நமது கண்டக்டர்கள் இருக்கிறார்களே அவர்களுக்கு இந்தக் காக்கி பெருமதிப்பையே அளித்துள்ளது. இ. போ. ச. பஸ் இராச்சியத்திலே அவர்கள் முடிசூடா மன்னர்கள். ஆனால் எல்லோரும் அல்ல. இந்த மன்னர்ப் பதவியை அளித்தது இந்தக் காக்கியேதான். சாதாரண உடையில் அப்பாவிகளாகத் திரியும் இம் மன்னர்கள் காக்கியைத் தூக்கிப் போட்டதும் அவர்கள் வைத்ததுதான் சட்டம்.

நமது காவல்காரக் காக்கிகள் இருக்கிறார்களல்லவா? அவர்களுக்கு இக் காக்கியால் ஓரளவு முன்னேற்றம் என்றே கூறவேண்டும். இந்த இ. போ. ச. காக்கிகள் சேவையால் சிறிது தாமதித்து வந்தால் இங்கே இந்த ஆஸ்பத்திரிக் காக்கி வழிமறிக்கும்.

நமது வீடுகளுக்கு அடிக்கடி விஜயம் செய்யும் ஒரு காக்கியைப்பற்றி ஒன்றும் கூறவில்லையே என்று அந்தக் காக்கி என்மீது வசைபாடு முன்னே அந்தக் காக்கியைப்பற்றியும் சிறிது கூறிவிடுகிறேன். ஏனைய காக்கிகளைப்போலல்ல இந்தக் காக்கி. கடமையைக் கண்ணாக மதிக்கும் இந்தக் காக்கி, எம் நண்பரான இந்தக்காக்கி யாரென்று அறியத் துடிப்பீர்கள். கூறுகிறேன். தினமும் கடிதக்கட்டுடன் நமது வீட்டு வாசலில் நம்மை அழைக்கும் காக்கிதான் இது. மற்றைய காக்கிகளைப்போல் இதற்கு எதுவித பெருமையோ கௌரவமோ கிடையாது. ஊரைச் சுற்றித் தன் கடமைபுரிவதில் இக் காக்கிக்குத் தனியின்பம். ஊரில் நடைபெறும் விடயங்கள் அனைத்தையும் இந்தக் காக்கியிடமிருந்து அறிந்துகொள்ளலாம். எவருடனும் இனிது பழகும் தன்மையும் இந்தக் காக்கியிடம் நாம் காணும் விசேட பண்பாகும். இதனைப்பற்றிக் கூற வேறு என்னதானிருக்கிறது?

இங்கு குறிப்பிடப்படாத வேறு பல காக்கிகளும் இருக்கின்றன. தொழிற்சாலைகள், வர்த்தகநிலையம் போன்றவற்றிலும் காக்கிகளே முக்கிய இடம்பிடிக்கின்றன.

இங்கு குறிப்பிடப்பட்ட பலதரப்பட்ட காக்கிகளும் இருக்கத்தான் செய்கின்றன. இத்தகைய மகத்துவம் வாய்ந்த காக்கிகள் நம் நாட்டில் இல்லையென்றால் நாமும் நாடும் என்னகதியாகும்? எல்லாக் காக்கிகள் சேவையும் நமக்கு வேண்டும். எனவே வாழ்க காக்கிகள்! வளர்க அவற்றின் சேவை! என வாயார வாழ்த்துவோம்.

இ. பே.

---

எசமாட்டி — என்னடி, இத்தச் சிறிய வேலையைச் செய்ய இரண்டு மெழுகுதிரிகளா?

வேலைக்காரி — அம்மா, கோபிக்கவேண்டாம். இரண்டு திரிகள் அல்ல நீங்கள் தந்த ஒன்றையே இரண்டாக வெட்டிச் சிக்கனமாகப் பாவிக்கிறேன்.

---

## கேளுங்கள் தருகிறேன்

| | ரூ. ச. |
|---|---|
| கோடி அற்புதர் அம்மானை புதிய பதிப்பு — விலை | 1 - 00 |
| பேரின்பக்காதல் | 20 |
| அன்னம்மாள் பிரார்த்தனை மங்களம் | 10 |
| செபஸ்தியார் பிரார்த்தனை மங்களம் | 10 |
| பத்திமா செபமாலை மாதா பிரார்த்தனை | 10 |
| ஆண்டவருடைய புதுமையுள்ள கல்லறைச்செபம் | 10 |

நூற்றுக்கு இருபது வீதம் கழிவு

முற்பணம் அனுப்பாத ஆடர் கவனிக்கப்படமாட்டாது.

எழுதுங்கள் :

எஸ். எம். இன்னாசிமுத்து உபதேசியார்,
சென். தோமாஸ் வீதி,
மாதகல்.

---

# மேற்கு ஜேர்மனி அதிபர் வில்லி பிரூன்ற் வத்திக்கான் சென்றார்

மேற்கு ஜேர்மனியில் தற்போது அதிபராக இருக்கும் சான்சலர் வில்லி பிரூன்ற் சென்றவாரம் பாப்பரசரால் வத்திக்கானில் அவர் உயர் பதவிக்குரிய அரசமரியாதையுடன் வரவேற்கப்பட்டார். அத்தருணம் மேற்கு ஜேர்மனியுடன் வத்திக்கான் சம்பந்தப்பட்ட பல கருமங்களைப்பற்றியும் இருவரும் சம்பாஷித்துக் கொண்டனரெனினும், ஒரு கருமம் முக்கியமான இடத்தைப் பெற்றுக்கொண்டது. அது போலாந்து — ஜேர்மனி எல்லை பற்றியதாகும். இந்த எல்லை தற்போது கிழக்கு ஜேர்மனியிலிருப்பதாயினும், மேற்கு ஜேர்மனியினால் அனுமதிக்கப்படவில்லை. சென்றயுத்தத்தின்முன் இவ்வெல்லை ஓடர் — நிசி நதி ஓரங்களுக்குப் பலமைல் தூரத்துக்கப்பால் கிழக்கே இருந்தது. யுத்தத்திலே ஜேர்மனி தோல்வியுற்றபோது ஓடர்—நிசி நதி ஓரங்களே எல்லையாய்ப் போலாந்து கணித்துவருகின்றது. திட்டவட்டமாக எவரது தேசமென ஒப்புக்கொள்ளப்படாத இப்பிரதேசத்தில் போலாந்து மக்களேபெரும்பாலானோர் — இவர்கள் கத்தோலிக்கர். திடமான நிலைமை நாட்டில் இல்லாததினால் மேற்றிராசனங்கள் வகுத்து சமய வேலையைத் திறம்பட நடத்த முடியாத நிலைமையயைப் பாப்பரசர் எடுத்துக்காட்டி, அவர் கிழக்குப் பிரதேசங்களுடன் எடுத்துவரும் சமரச முயற்சிகளில் இவ்விஷயத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து உதவக்கேட்டுக் கொண்டார். பாப்பரசர் எடுத்துக்கொண்ட கருமம் சித்தியடையுமானால் போலாந்து அரசாங்கம் அவருக்குப் பெரிதும் கடமைப் பட்டதாக இருக்கும்.

---

# வட அயர்லாந்தில் கலகங்கள் தொடர்ந்து நடக்கின்றன

வட அயர்லாந்தில் கத்தோலிக்கருக்கும் புறொட்டஸ்தாந்து சமையத்தவர்களுக்குமிடையில் கலகங்கள் தொடர்ந்து நடந்து கொண்டு வருகின்றன. அங்கே சிறுபான்மையினரான கத்தோலிக்கருக்குச் சம உரிமை கொடாமையினால் அவர்கள் அமைதியிழந்து தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துக் கொள்கின்றனர். அப்பகுதியிலுள்ள கத்தோலிக்க அதிமேற்றிராணியாரும், புறொட்டஸ்தாந்து மதத்தவரின் அதிகாரிகளும் ஒன்று சேர்ந்து அமைதிக்கு பல விண்ணப்பங்கள் செய்திருந்தும் இன்னும் அதிகபலன் ஆகவில்லை.

---

# இலங்கையிலுள்ள அமெரிக்க அமைதிப்படைபற்றி அமெரிக்க அரசாங்கம் விடுத்த பத்திரிகை அறிக்கை

இலங்கைக்கு அமைதிப் படை சேவையை வழங்குவதற்கென 1962-ம் ஆண்டில் கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தை முடிவடையச் செய்ய விரும்புவதாக இலங்கை அரசாங்கம், அமெரிக்க அரசாங்கத்திற்கு தெரிவித்துள்ளது.

பிரஸ்தாப உடன்படிக்கையில் இடம்பெறவுள்ள 90நாள் அவகாச சரத்தின்கீழ் அமைதிப் படையின் சேவையை முடிவடையச் செய்யும் வேளையில், இலங்கை அரசாங்கம் அமைதிப் படையின் கடந்தகால சேவைகளுக்கு, அமெரிக்க அரசாங்கத்துக்கு நன்றிதெரிவித்துள்ளது. அத்துடன் அமைதிப் படையில் பணியாற்றும் தொண்டர்களுக்கும் அவர்களின் முயற்சிகளுக்கும் நன்றி தெரிவித்துள்ளது.

அமைதிப் படையினர் முதன் முதலாக 1962-ம் ஆண்டில் இங்கு வந்தனர். இலங்கை மேலதிக தொண்டர்சேவையை நாடாததினால் அவர்கள் இரண்டுவருடம் மட்டுமே இலங்கையில் தங்கியிருந்தனர். 1967-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இலங்கைக்கு மீண்டும்வந்த அமெரிக்க அமைதிப் படையினர், அன்று முதல் கிராமஅபிவிருத்தித் திட்டங்களிலும், சுகாதாரத்துடன் தொடர்புடைய திட்டங்களிலும் பணியாற்றி வந்துள்ளனர்.

இலங்கையில் இப்பொழுது 20 அமைதிப்படைத் தொண்டர்கள் இருக்கின்றனர். இவர்கள் குறிப்பாக வலுக்குறைந்த பிள்ளைகளுக்கான நிறுவனங்களில் பணியாற்றி வருகின்றனர்.

இலங்கை முன்பு விண்ணப்பித்திருந்த பிரகாரம், கோடைகாலத்தில் இங்கு வரவிருந்த திறமை வாய்ந்த இரண்டு புதிய தொண்டர்கள்குழு இதேதேவையுள்ள இதர நாடுகளுக்குத் திருப்பப்பட்டுள்ளன.

இலங்கை அரசாங்கம் உடன்படிக்கையை முடிவடையச்செய்ய மேற்கொண்டதீர்மானம்பற்றி அமெரிக்க அரசாங்கம் கவலை தெரிவிக்கும் அதேவேளையில், அமைதிப் படையினர் மேற்கொண்ட சீரிய பணிகளுக்கும், நாட்டிற்கு நல்கிய சேவைகளுக்கும் இலங்கை அரசாங்கம் தெரிவித்த நன்றிக்கு, அமெரிக்கா நன்றியறிதலாக இருக்கின்றது.

(USIS)

---

✝

## 1-ம் வருட மரண ஞாபகார்த்தம்

### J. P. மாணிக்கம் பர்ணந்து

தோற்றம் : 13-8-1905. மறைவு : 22-7-1969.

இறைவனடி சேர்ந்தார்க்கு இறப்பில்லையாதலால் இறைவனடி சேர்ந்தேன் இறந்து.

கருணை நிறைந்த இறைவனே மரித்த உமது அடியான் ஜே. பி. மாணிக்கம் பர்ணந்துவுக்கு நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும். இவர் உம்முடைய புனிதருடன் தோழமை கொண்டாட அருள்புரியும். மனித பெலவீனத்தால் இவர் செய்த குறைகளை மன்னித்து நித்திய ஆத்துமசாந்தியை அளித்தருளும்.

நேசபத்தாவை இழந்து துயருறும் :

மனைவி : மேரி அலங்காரம் பர்ணந்து. மகன்: எம். திமோத்தி பர்ணந்து, எம். டேவிட் பர்ணந்து, எம். ஜெயசீலன் பர்ணந்து. மகள் : எம். மனோரதி பர்ணந்து, எம். கஸ்தூரி பர்ணந்து, எம். ராஜேஸ்வரி பர்ணந்து, எம். நவராணி பர்ணந்து. மருமகன் : ஏ. லிகோரி பர்ணந்து. பேரன்: எல். அன்ரன் பர்ணந்து, எல். ஜோன்சன் பர்ணந்து.

90|70.

---


# ச. வ. தாவீதுப்பிள்ளை அவர்களின் மறைவு

பச்சிலைப்பள்ளி, கட்டைக்காடு கப்பலேந்திமாதா கோவிலைச் சேர்ந்தவரும் மேற்றிராணிமார், குருமார், பெரியோர் ஆகியோரின் நன்மதிப்பைப் பெற்றவரும், பாதுகாவலன் பல்லாண்டு சந்தாதாரரும் திருமதி பிலுப்பாச்சி தாவீதுப்பிள்ளை அவர்களின் அருமைப்பத்தாவும், அநுராதபுரம், புனித வளனார் கல்லூரி புஷ்பநாயகம், கட்டைக்காடு, றோ. க. த. க. பாடசாலையின் தலைமை ஆசிரியர் அருளானந்தம், பரந்தன் இரசாயனக்கூட்டுத்தாபனம் அல்போன்ஸ், திருக்குடும்ப கன்னியாஸ்திரி சங். சகோதரி றேஸ் மேரி ஆகியோரின் அருமைத்தந்தையும் ஆகிய திரு. சந்தியாப்பிள்ளை வஸ்தியாம்பிள்ளை தாவீதுப்பிள்ளை அவர்கள் ஆடித்திங்கள் 6-ம் நாள் சடைகித் தேவதிரவிய அனுமானம் பெற்று நல்விருந்தருந்தி மனைவி மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் சூழ்ந்து நின்று செபம் ஓதிநிற்க, யேசு, மரியாயே, சூசையப்பரே என் ஆத்துமத்தை உங்கள் கையில் ஒப்படைக்கிறேன், யேசுவே என் பேரில் இரக்கமாயிரும், கப்பலேந்தித் தாயாரே என்பேரில் இரக்கமாயிரும் என்று தாமாகவே உச்சரித்து "என் அருமைச் செல்வங்களே என் அருகில் வாருங்கள்" என்று அழைத்து "எல்லாம் முடிந்தது நான் போய் வருகிறேன்" என்று விடைபெற்றுக் கொண்டு, கடைசியாகத் தன் ஒரேமகளாகிய சங். சகோதரி றேஸ் மேரி அவர்களிடம் "தாகமாயிருக்கிறேன்" என்றுகூறி தாகசாந்தி பெற்றுக் கொண்டிருக்கும்போதே தனது ஆன்மாவைப் படைத்தோன் கையில் ஒப்படைத்தார்.

6—7—70-ல் யாழ்ப்பாணத்தில் மரித்த இவரது பூதவுடலை இவரது தாயகமாகிய கட்டைக்காட்டிற்குக் கொண்டு வந்து மறுநாள்7—7—70 மாலை நாலா பக்கங்களிலுமிருந்துவந்த உறவினர் நண்பர்கள் ஆகியோர் புடைசூழ ஊர்வலமாகக் கொண்டு சென்று கட்டைக்காடு புனித கப்பலேந்திமாதா ஆலயத்தில் வைத்து பச்சிலைப்பள்ளி கட்டளைக்குரவர் வண. லெபோன் அடிகளால் துக்கப்பாடற்பூசை நிறைவேற்றி ஆன்மாவின் ஆறுதலுக்காக ஒப்புக்கொடுத்தபின் சேமக்காலை கொண்டுசென்று வண. குரவர் அவர்களால் கடைசி ஆசீர் அருளப்பட்டு புதிய கல்லறையில் பூமதானம் செய்யப்பட்டது.

இவர் மரிக்கும்போது இவருக்கு வயது 70. இவர் நாட்டுப்பற்று, சமயப்பற்று மிக்கவராக விளங்கினமையால் ஆலோசனைகள் தேவைப்படுவோர் இவரை நாடிவந்து நல்லாலோசனைகள் பெற்றுச் செல்வர். இவரின் பிரிவால் நாடு ஓர் உத்தமனை இழந்ததுமன்றி, இவரது நண்பர்களும் ஓர் அரிய பொக்கிஷத்தை இழந்துள்ளனர். இவரின் ஆன்மா சாந்தியடைவதாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**அன்புள்ள தம்பி-தங்கையரே வணக்கம்!**

அன்ரனிடம் அவனுடைய அப்பா ஐந்துரூபா கொடுத்துக் கல்லூரிச் சம்பளத்தைக் கட்டும்படியாகச் சொல்லி அனுப்பினர். வழியில் அப்பணத்தை அன்ரன் தன் கூட்டாளிகளோடு சேர்ந்து போக்கடித்து விட்டான். அப்பா இதை அறிந்தால் அடிப்பார் எனப்பயந்த அன்ரன் சம்பளம் கட்டிவிட்டேன் என அப்பாவுக்குப் பொய்சொன்னுன். பற்றுச்சீட்டு எங்கேஎன்று அப்பா கேட்டதற்கு உபாத்தியாயரிடமிருந்து வாங்க மறந்துவிட்டேன் என்று இன்னொரு பொய்யைக் கூறினுன் அன்ரன். ஒருபொய்யை மறைப்பதற்கு இன்னொரு பொய்யைப் பேசவேண்டியதாயிற்று.

நாட்கள் சில கடந்தன. அந்தமாதம் சம்பளம் கட்டாதவர்களை 25ஆம் தேதிவரையில் பார்த்துவிட்டு பின்னர் வீட்டுக்கு அனுப்பிவிடுவது வழக்கம். அதுபோலவே அன்ரனையும் வகுப்பைவிட்டு வெளியேற்றிவிட்டார் உபாத்தியாயர்.

வீட்டுக்குச்சென்று அப்பாவிடம் எப்படிச் சொல்வதுஎன்று பயந்துகொண்டு அன்ரன் வீட்டுக்குப் போகவில்லை. அவன் தினந்தோறும் கல்லூரிக்குப் போவதாகச் சொல்லிவிட்டு எங்கேயோ சுற்றிவிட்டு வீட்டுக்குப் போவான். இப்படியே சிலநாட்கள் கழிந்தன.

ஒருநாள் அன்ரனுடைய அப்பாவுக்குக் கல்லூரியிலிருந்து ஒருகடிதம் வந்தது. அதில் அன்ரன் சம்பளம் கட்டவில்லையென்றும், பத்துநாட்களாகக் கல்லூரிக்கு வருவதில்லையென்றும் தலைமை உபாத்தியாயர் எழுதியிருந்தார். விஷயத்தை விளக்கமாக அறிந்துகொண்ட அப்பா அன்ரனைச் சும்மா விடுவாரா? அடித்தார்; நையப்புடைத்தார். பணத்தைப் போக்கடித்தபோதே உண்மையைச் சொல்லியிருந்தால்? கோபத்தால் ஏதோ பேசியிருப்பார்; அல்லது ஒருஅடி அடித்திருப்பார். அவ்வளவுதானே?

ஆகவே யாரும் பொய்சொல்லக்கூடாது. ஏனெனில் பொய்யை மறைக்கமுடியாது. ஒருநாள் மறைத்தாலும் ஒருநாள் அது வெளிப்பட்டேதீரும். சூரியனைக் குடையால் மறைத்துவிட முடியுமா? அதேபோலத்தான் பொய்யையும் மறைக்க முடியாது. எனவே சிறுவயதிலிருந்தே பொய்பேசுவதைப் பழக்கமாகக் கொள்ளக்கூடாது.

— அண்ணு

......கமலாவிடம் உள்ள பெருந் தன்மை உன்னிடம் இல்லையே! அதற்காக நீ வெட்கப்படு. சரி நடந்தது நடந்து விட்டது. இனிமேலாவது நீங்கள் இருவரும் ஒற்றுமையுடனும் அன்புடனும் இருங்கள். உங்கள் மகிழ்ச்சியே எங்கள் மகிழ்ச்சி......

# கமலா!

"அண்ணு, இந்தக் கணக்கை கொஞ்சம் காட்டித்தாவேன்" என்று கனிவுடன் கேட்டாள் கமலா.


"போ, போ இங்கேவந்து தொந்தரவு பண்ணுதே; கணக்குத் தெரியாட்டா நாளைக்காலை ஸ்கூலுக்குப் போய் யாரிடமாவது கொப்பி பண்ணு" என்று எரிந்து விழுந்தான் அவள் அண்ணன் சேகர். கமலா மௌனமாய் நின்ருள்.

"இந்த அறையைவிட்டு போகிருயா இல்லையா?"

"தயவு செய்து இந்தக் கணக்கை மட்டும் காட்டித் தந்திடு அண்ணு."

"எனக்கு முடியாது. போய் யாரிடமாவது கொப்பி பண்ணு, போ" என்ருன் சேகர். இதைக் கேட்ட கமலாவுக்கு ரோஷம் வந்துவிட்டது.

"நீ மட்டும் என்னவாம், தமிழ்ப் பாடத்திலே மக்கு, அடுத்த வீட்டு ராஜனிடம் ஒவ்வொருநாளும் தமிழ்ப்பாடம் கொப்பி பண்ணுகிருயே" என்று வெடுக்கெனச் சொன்ருள். இதைக்கேட்ட சேகருக்கு கோபம் பொத்துக் கொண்டுவந்தது, முகம் சிவந்தது:



"என்ன சொன்னே! நான கொப்பி பண்ணினேன்" என்று சொல்லிக்கொண்டே அவள் சடையைப் பிடித்து இழுத்து கீழே தள்ளினுன். அப்பாவின் மேசையில் மோதிக் கீழே விழுந்தாள் கமலா. அப்போது அந்த மேசையிலிருந்த அப்பாவின் புதிய மூக்குக் கண்ணுடி கீழே விழுந்து சுக்கு நூருகியது. உடனே சேகர் அங்கிருந்து ஓட்டம்பிடித்தான்.

இருட்டிய பிறகு வீடு திரும்பிக் கொண்டிருந்தான் சேகர்.

"இன்றைக்குக் கட்டாயம் நமக்கு அடி விழுவது நிச்சயம். நான் அடித்த கோபத்தையெல்லாம் சேர்த்து அப்பாவிடம் சொல்லியிருப்பாளே கமலா. ஐயோ! அவள் கணக்கைச் செய்துகொடுத்திருந்தால் ஒன்றும் சொல்லியிருக்கமாட்டாளே" என்ற பலவித எண்ணங்களுடன் வீட்டை நெருங்கினுன். அப்போது உள்ளேயிருந்து டக்றர் அன்ரன் வெளியே வந்தார். இதைக் கண்ட சேகர் "யாருக்கு உடம்பு சரியில்லை" என்ற கேள்வியைக் கேட்டுக்கொண்டான். தயங்கத் தயங்கி உள்ளே சென்ற சேகர் நேரே அடுப்பங் கரைக்குச் சென்ருன். அங்கே அம்மாவிடம் "அம்மா டக்டர் வந்துவிட்டு போருரே எதற்கு?" என்ருன்.

"இது உனக்குத் தெரியாதா? கமலாவுக்குச் சுரம்" என்று அழுது கொண்டே பதிலளித்தாள் அம்மா.

"என்ன கமலாவுக்குச் சுரமா? அப்போதுகூட நல்லாகத்தானே இருந்தா" என்று ஒருவித தயக்கத்துடன் வினவினுன் சேகர்.

"அப்பா புதுசா வாங்கின மூக்குக் கண்ணுடியை உடைத்து விட்டாளாம். அப்பா கோபத்தில் நல்லாய் அடித்து விட்டார். அதுதான் கமலாவுக்கு சுரம்" என்ருள்.

"என்ன கமலா மூக்குக் கண்ணுடியை உடைச்சுவிட்டாளா? இல்லவே இல்லை. அவள் உடைக்கவே இல்லை. நான்தான் உடைத்தேன். அவள் தியாகி. எதற்காக அவள் அப்பாவிடம் அடி வாங்கியிருக்கிருள். அவளின் பெருந் தன்மைதான் என்னே! நான் மகா பாவி. கமலா என்னை மன்னித்துவிடு. உனக்கு நான்பெரும் துரோகம்செய்துவிட்டேன். நீதான் என் அன்புத் தங்கை" என்று தனக்குள் சொல்லிக் கொண்டே அவன் அன்புத் தங்கை கமலா படுத்திருக்கும் அறையை நோக்கி ஓடினுன் சேகர்.

"கமலா என்னை மன்னித்துவிட்டேன் என்று ஒரு வார்த்தை சொல்லு. உனக்குப் பெருந் துரோகம் செய்துவிட்டேன். மூக்குக் கண்ணுடியை நீ உடைக்கவே இல்லை. என்னுல் தானே அதுஉடைந்தது. எனக்காக நீயல்லவா அப்பாவிடம் அடி வாங்கி இருக்கிருய். அப்பாவிடம் நான் உண்மையைச் சொல்லி விடுகிறேன் என்று கதறினுன் சேகர்.

"அண்ணு சத்தம் போட்டுப் பேசாதே. அப்பா கேட்

[மறுபக்கம் பார்க்க]

# பாட்டியின் பேட்டி (3)

(முன் தொடர்ச்சி)

**குமார்:** வந்தனம் பாட்டி. அயல்வீட்டு அரசனையும் அன்னத்தையும் அழைத்துவந்திருக்கிறோம்.

**பாட்டி:** எல்லாருக்கும் நல்லாசி! கேட்கிற ஆட்கள் கூடினுல் கதை சொல்லவும் உசார் உண்டாகுமல்லவா?

**குமுதம்:** நிசம்தான். அதற்கு ஆசைப்பட்டல்லவா இவர்களும் எங்களோடு இங்குவந்தார்கள். எட்டாம் வகுப்புப் பாடத்திட்டத்திலே யோசவாஸ்முனிவரின் சரிதமும் தோன்றுகின்றது. கதையும், பாடமும், ஒன்றில் முடிந்தால் வாய்ப்புத்தானே!

**பாட்டி:** யோசவாஸ் இலங்கையில் வந்து இறங்கியது ஒரு கூலிக்காரனைப்போலே என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். கத்தோலிக்க குரவர் எவரும் ஈழத்துமண்ணிலே கால்வைக்கப்படாதென்று கடுமையான சட்டமொன்று பிறப்பித்திருந்தார்கள் ஒல்லாந்த அரசினர். எனவே, பறங்கியர் எவரும் நாட்டிலே பிரவேசித்தால் உடனே கொலைத்தண்டனைக்குள்ளாவார்கள். ஆதலாற்ருன், முப்பது வருடங்களாக நமது முதாதைகள் ஆன்ம பட்டினி அனுபவிக்க வேண்டியிருந்தது.

**மஞ்சு:** அப்படியானுல் இவருக்கு இங்குவரத்திடமும் சாதுரியமும வந்ததெப்படி?

**பாட்டி:** அதுதான் ஆண்டவன் அருட்செயல். பராபரான பரம்பொருள் ஓரிடத்திலே வியாதிதொடங்க வேறிடத்திலே அதன் மருந்தைத் தயார் செய்து வைத்து விடுகிருர். அதை எடுத்துப் பாவிப்பது பகுத்தறிவுள்ள மனிதனின் கடமை. கிறீஸ்து மதத்தை நம் நாட்டுக்குக் கொண்டு வந்த போர்த்துக்கீச வியாபாரிகள் செய்த குற்றங்களுக்குத் தண்டனையாகவே அவர்களைப் பதிதருக்குக் கையளித்தார் கடவுள். ஆனல், தனது திருச்சபையின் மக்கள் திருந்த விரும்பினுரேயொழிய, அழிய விரும்பவில்லை. பதிதர் இங்கு சத்திய வேத விசுவாசத்தை வேரோடு களைய விழையும வேளை வேறிராட்சியத்திலே தேவன் தனது பிரமாணிக்கமுள்ள ஊழியரைத் தயார் செய்திருந்தார். அந்தத் தூதுவனின் வாழ்வின் ஒவ்வொரு படியும் வளர்ச்சியின் ஒவ்வொரு அடியும் கடவுளே வழி நடத்தினுர் என்பது அவரது சரிதையை அவதானமாய் ஆராய்வோர் எவரும் அறியக்கூடியது. இன்று ஒரு சம்பவத்தை மட்டும் குறிப்பிடுவோம்.

**அரசன்:** ஆண்டவனே எல்லாவற்றையும அறிந்தவராகையால் மனிதர் அறியமுடியாத காரியங்களைச் சாதிக்க இயலும் தானே. ஏன்? இதற்கு உதாரணம் எந்தத்தாபனத்திலும் உண்டு. சாதாரணசிப்பந்திகள் செய்த பிழைகளை சீராக்குவதும் உயர் நிர்வாகிகளின் கடமைதானே.

**பாட்டி:** தூத்துக்குடியிலே நின்று தோட்டக்காட்டுத் தொழிலாளி போலத் தோணியிலேறின முனிவர் ஒரிருநாட்களில் யாழ்ப்பாணம் வந்து சேருவேனென எண்ணினுர். அங்கு உதவி செய்ய ஒரு பறங்கியரையும் வசப்படுத்திக்கொண்டார். ஆனல் நடந்ததென்ன? கடலிலே கடும் புயலுண்டாகி, பல நாட்கள் பட்டினி கிடந்தபின் மன்னுரிலே கரைபிடித்தார்கள். அவ்விடத்தைப்பற்றி அவர் விசாரித்துத் தானும் அறிந்திருந்தாரோ தெரியாது. அங்குதான் அவரும் அவர் சீடனுன யுவாமும் எச்ச உணவைப பிச்சை வாங்கிப் பிழைத்தார்கள். சிறிது பெலன் வந்ததும் யாழ்ப்பாணம் போன தோணியிலேறி அங்குபோய் இறங்கினுர்கள்.

**அன்னம்:** வருணனின் விளையாட்டை எப்படித்தான் கடவுளின் கருணை என்று சொல்லலாம். ஒருபெரிய சோதனை என்றல்லவா சொல்ல வேண்டும்.

**பாட்டி:** உண்மையாக அது இரண்டும் தான். தேவ ஊழியரின் விசுவாசத்துக்கு இந்தச்சம்பவங்கள் ஒரு பொல்லாதபரீட்சை. சண்டமாருதத்திடையே கொண்டுவந்த பொருட்களிற் பெரும் பகுதி கடலுக்கிரையாயின. கடுங் காவல் வைத்திருந்த யாழ்ப்பாணத்துறையிலே கத்தோலிக்கரின் கேந்திரமான தூத்துக்குடியிலிருந்து வந்திறங்கினுற் கட்டாயம் அகப்பட்டிருப்பார். ஆனல், மன்னுரில் அப்படியல்ல. காவலர் [illegible] ராய்க் கரையிலே ஏக்கப்பட்ட பரதேசிகளைப் பார்ப்பதற்கெவருமில்லை. மேலும், மன்னுரிலிருந்து யாழ்ப்பாணம் வருகிறவர்களுக்குப பரிசோதனைப பிரச்சனையேயில்லை. பார்த்தீர்களா? கடவுள் எப்படித்தன் ஊழியர்களைக் காப்பாற்றுகிருர்; தின்மையில் நின்று ஒப்பற்ற அனுபவத்தையும், அறிவையும் அளிக்கிருர்.

**அன்பு:** சாமான்களை இழந்தவர்களுக்குச் சாப்பாட்டுக்கு வழி என்ன? இரத்தல் போல இழிவான தேதுமுண்டா? பசி, பட்டினி, வியாதி, வருத்தம், புயல் போன்றவெல்லாம் தேவகோபத்தின் பயன் என்றல்லவா சொல்லுகிருர்கள்.

**பாட்டி:** இரவச்சம் பற்றித் திருவள்ளுவரும் ஒரு முழு அதிகாரம் வரைந்திருக்கிருர். எனினும், இவை இழிந்த மனிதனுக்கு இயற்கையாகி விட்டன. கடவுள் கோபிப்பதில்லை நாங்கள் தான் அவர் வைத்த ஒழுங்கைத் திருத்த முனைந்து அலலோல கல்லோலம், இட்டடை இடைஞ்சலெல்லாம் பட்டு முட்டாடுகிறோம். கடவுளின் ஞானத்தையும், நன்மையையும் விளங்காமல் விரும்பாமல் வேதனைப்படுகிறோம். தின்மை மனிதனின் கெட்டித்தனத்தால் வந்தது. அத்தனை விட்டு ஏத்தன் பின்னுலே போனதின் பயன்.

**அருள்:** அப்படியாயின் தின்மையில் நின்று எப்போதும் நன்மை வருமா? வருமாயின் அதைப்பற்றிப் பச்சாத்தாபமோ பிராயச்சித்தமோ தேவையில்லையே!

**பாட்டி:** இவை கொஞ்சம் கஷ்டமான கேள்விகள். மனிதகுலத்தின் சரிதையிலேபெரும் பகுதி இதற்கு விடை தேடுவதிலே ஞானிகள் பட்ட பாட்டையே காட்டுகின்றது. இதுபற்றி அடுத்தமுறை கூறுவோம். சேமமே சென்று விளையாடுங்கள்.

**அன்னம்:** நன்றி பாட்டி! சென்று வருகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனிதர் லொயலாவின் பாத யாத்திரை

உலகெங்கணுமுள்ள யேசு சபைப் பரித்தியாகிகள் ஆடி முப்பத்தோராம் நாளில் தங்கள் கழகத்தை அடியிட்டவரான புனிதர் இக்கினேசியஸ் லொயலாவுக்கு விழாஎடுத்து மகிழ்வர். திருத்தந்தை 11-ம் பத்திநாதரால் ஞானவொடுக்க பாதுகாவலராகப் பிரகடனப்பட்ட புனிதர் லொயலாவின் தபமுயற்சிகள் உலகப் பிரசித்தி பெற்றவை.

ஸ்பெயின்தேசபிரபுத்துவ குடும்பத்தைச் சேர்ந்த இக்னேசியஸ், பிரபுக்கட்கேஉரித்தான ஆண்மைக்கும் வீரத்துக்கும் அடிமையானவர். போர்க்களம் புகுந்து வாள் வீசி வெற்றிப்பிரதாபமுடன் திகழவிரும்பியஇந்தவீரனின் காலில்பட்ட குண்டுக்காயம் இவரது இலட்சியத்தையும், எதிர்காலத்தையுமே எதிர்த்திசையைநோக்கித் திருப்பி விட்டது.

காலில் இரண சிகிச்சை பெற்று கோட்டையிலே வாரக்கணக்காகத் தங்கநேரிட்ட இந்த இளம்வீரன் பொழுது போக்குவதற்காக வாசிப்பில் தன் கவனத்தைத் திருப்பினுர். ஆயின், அப்பெருங் கோட்டையில் அவருக்குக் கிடைத்தவை ஆண்டவர்சரித்திரமும், அர்ச்சியசிட்டர்கள் வரலாறுமே. வாசித்தவற்றைச் சிந்தனையில் எடுத்து அலசியபோது வாழ்வின் நிலையாமையை, புகழின்அநித்தியத்தை உணர்ந்தார்.

கால்வருத்தம் குணமுற்றுல் பாதயாத்திரைசெய்து கிறிஸ்துநாதரின் புண்ணிய பூமியைத் தரிசிப்பதுஎன நிச்சயித்தார். முதலில் மொனிசேறத் என்னுமிடத்திலுள்ள மரியன்னையின் திருசேத்திரம் சென்றுர். அன்றிலிருந்து தனது தியானங்களையும் புண்ணியவழியில் ஒழுகுதற்கான கருத்துகளையும் குறிப்பேடு ஒன்றில் பதிந்துவரலானுர். இக்குறிப்பேடுபின்னர் **ஞான வழிப் பயிற்சிகள்** எனும் மகுடத்துடன் பிரசுரிக்கப்பட்டு பல லட்சம் பிரதிகள் விற்பனையாகின.

தமது பாதங்களில் ஏற்பட்ட இரணங்கள் மாறிவருதல்கண்டு பாதயாத்திரையைத் தொடங்க எண்ணிய லொயலா சுகத்தாழ்வு காரணமாக மீண்டும் சிலமாதங்கள் தாமதிக்கவேண்டியதாயிற்று. இக்காலத்திலும் நாட்களைச் செபத்திலும், கடுந்தபத்திலும், தியானத்திலுமே செலவிட்டுவந்தார். 1523-ம் வருடம் மாசிமாதம் பாதயாத்திரை ஆரம்பமாயிற்று.

பார்சலோனுவில் புறப்பட்டநாவாய் கடுங்காற்று காரணமாக நேப்பிள்சுக்கு அண்மையில் தரிக்க, லொயலா அங்கிருந்து கால்நடையாகவே ரோம்நகர் சென்றுர். அந்நாட்களில் ரோமையில் பயங்கர கொள்ளைநோய் பரவியிருந்தமையால் லொயலா மக்களுடன் உறவாடுதலில் நின்றும் தவிர்க்கப்பட்டார். பட்டவர்த்தனான இக்னேசியஸைப் பரதேசிக் கோலத்தில் கண்டனர் அவரது இனத்தவர்கள் சிலர். உணவும் உடையும்தந்தனர்திரும்புமாறு வற்புறுத்தினர். அவர்களது வற்புறுத்தல் லொயலாவின் இலட்சியத்தைச் சிதைக்கவில்லை.

இத்தாலியின் புனித தலங்கள் அனைத்துக்கும் கால்நடையாகவே சென்ற இக்னேசியஸ் இறுதியாகப் பாய்க்கப்பலேறிப் பாமாகஸ்டாவைச் சேர்ந்தார். மற்றெரு கப்பல் அவரை இசிறவேல் கரைக்கு எடுத்துச் சென்றது. தாம் நீண்டநாட்களாக எதிர்பார்த்திருந்த புனித தலங்களின் தரிசனம் கிடைக்கும் மகிழ்ச்சியோடு சகயாத்திரிகர்களுடன் தேவதோத்திர கீதங்களைப் பாடியவண்ணமே புறப்பட்டார்.

இக்னேசியஸ் கையில் பணத்தையோ, உடைகளையோ எடுத்துச் சென்றவரல்லர். தமக்கு வேண்டியவற்றை யா

— சாமுவேல் பெனடிக்ற் —

சித்தே அவ்வப்போது பெற்றுக்கொண்டார். தேவ அருளும், அவரது கம்பீரமான பிரகாசமிக்க இராணுவத் தோற்றமுமே அவருக்குத் தேவையானவற்றை அவ்வப்போது பெற்றுத் தந்தன.

இந்த யாத்திரிகர்களை வழிநடாத்த பலஸ்தீனத்தில் புண்ணிய தலங்கட்குப் பாதுகாவலர்களாகவிருக்கும் பிரான்சிஸ்கன் சபைத் துறவிகள் கையில் சிலுவையோடு காத்திருந்தனர். கிறிஸ்து பிறந்து வளர்ந்து பாடுபட்டு உயிர் நீத்த தலத்தைக் கண்டவுடனேயே ஆனந்தமும் அக்களிப்புமடைந்த இக்னேசியஸ் துறவிகளிடம் தமது வாழ்நாள் முழுவதையும் அங்கேயே கழிக்க விரும்புவதாகத் தெரிவித்தார். தங்கள் மடாதிபதி வந்தபின்னர்தான் இவ் வேண்டுகோளுக்குப் பதில் காண முடியுமென அவர்கள் தெரிவித்தமைகண்டு இளைஞர் ஏமாற்றங் கொண்டார்.

இரவுமுழுதும் தூங்கவில்லை லொயலா. தமக்குக்கிடைத்த பெரும் பாக்கியத்தை எண்ணியெண்ணி செபத்தியானத்தில் அவ்விரவைச் செலவிட்டார். அதிகாலையில் சகயாத்திரிகர்கட்குமுன்பாக எழுந்து தலங்களைத் தரிசிக்கத் தயாராயிருந்தார். யேசுவைச் சிறை வைத்திருந்த பகுதி, போஞ்சியு பிலாத்துவின் வாசஸ்தலம், இராயப்பர் கிறிஸ்துவை மறுதலித்த இடம், சீடர்களின் பாதங்களைக் கழுவின இல்லம்என்பன முதல்நாளில் தரிசிக்கப்பட்டன.

கல்வாரிமேட்டில் அன்றிரவைக் கழித்தனர். அந்நிகழ்ச்சியையெண்ணி ஆனந்தக்கண்ணீர் உகுத்தார் லொயலா. காலையில் மலைமீது ஏறிச்சென்று திருப்பலியில் பங்குகொண்டு திருவிருந்தும் அருந்தினர். மாலையில் அந்தோனியா கோட்டையிலிருந்து கல்வாரி மேடுமட்டும் நடாத்தப்படும் சிலுவைப்பாதையில் பங்குகொண்டு கிறிஸ்துவின் பாடுகளையெண்ணிக் கசிந்துருகினர்.

நாட்கள் வெகு ஆனந்தமாகவும், பக்தியருட்சியுடனும் கடந்து சென்றன. தமது விண்ணப்பம் கைகூடும், இரவு பகலாக வாழ்நாள் முழுவதும் பலஸ்தீனத்தில் தங்கி இறைபணியாற்றலாம் என்றெண்ணிய லொயலாவை மடாதிபதி சந்தித்தார். விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ள முடியாதெனத் திட்டவட்டமாய்க் கூறினர். லொயலா கெஞ்சினர், அழுதழுது விண்ணப்பித்தார். யாவும் பயனற்றதைக் கண்டு சத்தியாக்கிரகம் செய்யவும் முற்பட்டார். ஆயின் மடாதிபதியின் ஆணையைப் புறக்கணிப்பின் மதப் பிரதிஷ்டம் செய்யப்படுவாரெனக் கேள்வியுற்றதும் பணிந்தார்.

பலஸ்தீனத்தில் இன்னமும் ஒரு தினமே செலவழிக்கலாம். கிறிஸ்து பரலோகத்துக்குச் சென்ற ஒலிவேத்து மலையை இறுதியாகஒருமுறை தரிசிக்க எண்ணங்கொண்டார், வாயில் காப்போனுக்கு லஞ்சம் கொடுத்துத் தனிமையாக மலையேறிச் சென்றுர். மலைஉச்சியில் கிறிஸ்துவின் தரிசனையையும் அவரது எதிர்காலப் பணிவிடைகட்கான ஆணையையும்பெற்றுக்கொண்டார். ஆயினும் இறங்கிவரும்போது கையும் மெய்யுமாகப் பிடிபட்டு மடாதிபதியின் அதிருப்திக்குள்ளானுர்.

மீண்டும் பலஸ்தீனத்தைத் தரிசிக்க வேண்டுமென்ற மனவுறுதியோடு தாயகம்நோக்கித் திரும்பிய லொயலா தம் வாழ்நாளில்அப்பாக்கியத்தை இன்னெருமுறை பெறவேயில்லை. தேவகரம் அவரை வேறுபக்கமாக அழைத்துச் சென்றது.

மறுமலர்ச்சிக் கொள்கைகளும் மதச் சீர்திருத்தங்களும் மதப்புரட்சிகளும் பேரலையாக எழுந்து கத்தோலிக்க திருச்சபையை ஆட்டி அலைத்துக் கொண்டிருந்த அவ்வேளையில் இக்னேசியஸ்போன்ற இணையற்ற வீரர்கள் திருச்சபையன்னைக்குத் தேவைப்பட்டனர். இக்னேசியசின் கொள்கையையும் இலட்சியங்களையும் தழுவிய வாலிபர் சிலரும் ஒருங்கிணைய யேசுவின் பரித்தியாகிகள்சபை உதயமாகியது.

இக்னேசியசின் தலைமையும் அருள்வழியும் தரித்திர வாழ்வும் ஒப்பற்ற தியாகங்களும் சிறந்த வழிநடாத்துகையும் யேசுசபை குறுகியகாலத்தில் திருச்சபைக்கு இணையற்ற சேவையைப் பெற்றுக்கொடுத்தன. பிரான்சிஸ் சவேரியார், பீற்றர் கனுசியஸ், பிரான்சிஸ் போர்ஜியாபோன்றயேசு சபையின் புனிதர்கள் கிறிஸ்துவின் இராச்சியம் உலகமெங்கும்பரவ உறுதுணையாக விருந்தனர். இன்று ஐம்பதினுயிரத்துக்கு மதிகமான யேசுசபைத் துறவிகள் கிறிஸ்துவின் திராட்சைத் தோட்டத்தில் உலகெங்கணும் கடமையாற்றி வருகின்றனர்.

மத்திய நூற்றுண்டுக் காலத்தில் சத்திய திருச்சபையை எதிர்நோக்கிய அதே இன்னல்கள், பிரச்சினைகள் இன்றும் திருச்சபையை வாட்டிவதைக்கின்றன. இந்நிலையில் அஞ்சா நெஞ்சாய் மக்களிடையே பணியாற்றப் பல லொயலாக்கள் தேவைப் படுகின்றனர். அன்று லொயலாவின் யேசுசபையினர் செய்த பணியை இன்று எம்மிடையே ஆற்றுவதற்கு நவீன லொயலாக்களாக மதிக்கப் படத்தக்க இல்லறத் தொண்டர்களே தகுதியானவர்கள்.

புனிதர் இக்னேசியஸ் இன்றைய இல்லறப் பணியாளர் கட்கெல்லாம் முன்மாதிரிகையாக மட்டுமல்ல, அவர்களை வழி நடாத்துவோராகவும் விளங்கவேண்டுமாறு பிரார்த்திப்போமாக

## புனித இஞ்ஞாசியார்

1. இஸ்பெயின் நாட்டு இஞ்ஞாசி யாரே
புஷ்பங் களாலுமைச் சூட்டிடு வேனு!
பாவினு லுமைப் பாடிடு வேனு!
நாவினு லுமை வியந்திடு வேனு!

2. உன் திருப் பெயரைக் கேட்ட உடனே
நன்ருய் நானும் எழுத விழைகிறேன்
அன்பினுல் நீருமே ஆண்டவர்க் குதவிட
என்னவோ பாடுகள் இத்தலம் பட்டீர்

3. காலிலே காயம் பட்டதும் நீரும்
மேலிலே எத்தனை வேதனைப் பட்டீர்
தன்னந் தனியனுய் உன்னை விடுத்து
என்ன வேலைக்கு ஆண்டவர் அழைத்தார்

4. முப்பது வயதிலே சிறுவ ருடனே
எப்படி நீரும் பாடம் படித்தீர்
தப்பை நீருமே செய்யா விடத்தும்
குற்றம் உம்மிலே சுமத்தப் பட்டது

5. யேசு பெயரை இத்தலம் நிலைநாட்ட
யேசு சபையை இங்கு நிறுவ
யேசு அன்பை மனிதர்க்கு விளக்கிட
யேசு வோடே ஒன்று சேர்ந்தீர்

6. “எல்லாம் ஆண்டவர் அதிமிக மகிமைக்கே”
நல்ல உனது விருது மொழியை
எல்லா இயேசு சபையினர் உணர்ந்து
வல்ல வேலையைச் செய்திடு வாரே

.7 புனித இஞ்ஞாசி யாரே கேட்டிடும்
மனித இனத்தின் மாண்புறு வேண்டலைக்
கனிவாய்க் கேட்டு ஆசி அளியுமே
பணிவாய் [illegible]

— [illegible]

## கமலா!

(சிறுவர்பக்கத் தொடர்ச்சி)

டுவிடப் போகிறுர். நான் அடி வாங்கினதே போதும்; இப்போ அப்பா இருக்கிற கோபத்திலே நீ சொன்னுல் உனக்கும் அடிவிழும். வேண்டாம், இனிமேல இதைப் பற்றிப் பேசாதே'' என்ருள் சேகரின் தங்கை கமலா.

அப்போதுதான் இருவரும் எதிர்பாராத ஒன்று நடந்தது. அது அவர்களுடைய அப்பா அறைக்குள் நுழைந்ததுதான். அவர் முகத்தில் கோபச்சாயல் தென்படவில்லை, சாந்தம் தவழ்ந்தது. “கமலா என்னை மன்னித்து விடம்மா; இந்த அற்பபொருளுக்காக உன்னை வாருக அடித்துவிட்டேன்'' என்று கூறிவிட்டு, சேகர்பக்கம் திரும்பி 'சேகர் நீங்கள் இருவரும் பேசிக்கொண்டிருந்ததை நான் வெளியே நின்று கேட்டுக்கொண்டுதான் இருந்தேன். கமலாவிடல் உள்ள பெருந்தன்மை உன்னிடம் இல்லையே; அதற்காக நீ வெட்கப்படு. சரி நடந்தது நடந்துவிட்டது. இனிமேலாவது நீங்கள் இருவரும் ஒற்றுமையுடனும் அன்புடனும் இருங்கள். உங்கள் மகிழ்ச்சியே எங்கள் மகிழ்ச்சி''என்று கூறிமுடித்தார்.

அடுத்த நாளே கமலாவுக்குச் சுரமெல்லாம் பறந்துவிட்டது. அதோ பார்த்திர்களா, சேகரும் அவளின் தங்கை கமலாவும் மகிழ்ச்சியுடன் துள்ளித் துள்ளி விளையாடுவதை. இப்போது அவர்கள் இணைபிரியாமல் அன்புடன் இருக்கின்றனர்.

—வேந்து.

✻ அமெரிக்காவில் ஒருநாளில் 118 தினசரிப் பத்திரிகைகள் வெளிவருகின்றன. ஒவ்வொரு பத்திரிகையும் 100 பக்கங்களுக்கு மேல்அச்சிடப்படுகின்றன, அமெரிக்கர் ஒரு பத்திரிகையையோ புத்தகத்தையோ வாங்கிப் படித்தால் திரும்ப அவற்றைப் பயன்படுத்தமாட்டார்கள், குப்பைத்தொட்டியில் வீசிவிடுவர்.

✻ **புல் பச்சையா நீலமா?** கென்ராக்கி என்னும் மாகாணத்தில் நீலநிறப் புல் வளர்கிறதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போகாதே போகாதே என் புதல்வா!

ஐயோ, நான் இங்கு பசியால் வாடுகிறேன். பன்றிக்கூழுக்கும் வழியின்றிப் பட்டினியால் மாளுகிறேன். அந்தோ! செல்வந்தரான என்தந்தை வீட்டில் எத்தனையோ கூலியாட்கள் உண்டு உடுத்துச் சம்பிரமமாக வாழுகின்ருர்களே. நானும் என்னபெரும் சந்தோஷமாய் அங்கு வாழ்ந்திருந்தேன். "என் புத்தியைத் தட்டிநீ போகாதே" என்ருர் என்தந்தை. கேட்டேனு! இனி என் செய்வேன்? எழுந்து என் தந்தையிடம் செல்வேன். அவருடையகாலடிகளில் வீழ்ந்து "பிதாவே, பரலோகத்துக்கு விரோதமாகவும், உமக்குமுன்பாகவும் நான் பாவஞ்செய்தேன். இனி உம்முடைய பிள்ளையென்று அழைக்கப்பட நான் பாத்திரவான் அல்ல. உம்முடைய கூலியாட்களில் ஒருவனுகஎன்னை ஏற்றுக்கொள்ளு"மென்று அவரிடம் சொல்வேன். என்னை அவர் ஏற்றுக்கொண்டால் சரி, அன்றேல் அவர் முன்பாகச் சத்தியாக்கிரகஞ்செய்து உயிர் துறப்பேன். இவ்வாறு சொல்லிக்கொண்டு இருந்தவன் பின்முன்பாராது எழுந்தான். தந்தையின் வீட்டுக்குப் புறப்பட்டுச் சென்ருன்.

அவனும் தொட்டுக்கொள் அம்மா, தொட்டுக்கொள் என்று அவர்களுடன் தோழமை பூண்டான். இல்லை, அவர்களின் இணைபிரியாத் தோழனுகி விட்டான். கேடுவந்தது பின்னே, மதிகெட்டுவந்தது முன்னே, அந்தோ! சூழல அவனைப் பாழாக்கத் தொடங்கியது. இலலை, பாழாககியே விட்டது. பன்றிகளோடுகூடிய கன்று போலானுன். எப்படி? அன்ருருநாள் ஒருவிருந்து, அது ஒரு பிறந்த பெருநாள் விருந்து அந்த இளைஞர் குழாமிலுள்ள எழுவரில் ஒருவனுக்குத்தான் பிறந்த பெருநாள். அவனது விடுதித் தோழர்களும், வெளித் தோழர்கள் சிலரும் அதில் கலந்துகொண்டார்கள். நமது இளைஞனுக்கும் அழைப்பிதழ்வந்து அவனும் சமுகமானுன். மதுரமான பட்சணங்களும், பழவகைகளும், மதுபானங்களும் அதனை மலரச்செய்து, எல்லோரையும் மகிழவைத்தன.

எல்லோரும் அறுசுவை உண்டிகளை வயிருர உண்டு களித்தனர். மதுபானங்களை வார்த்து வார்த்து மனம் போலக் குடித்தனர். ஆனுல், நமது இளைஞன்,மட்டும் எதையுமே குடியாமல் தனிமரம் போல் நிற்கக்கண்டு பிரமித்தனர். உடனே அவனுக்கும் மதுபானக் கிண்ணம் நீட்டப்பட்டது. அதைக் கண்டதே வெட்கமுற்றவன் போல் அனைவரையும் ஒரு கால் வட்டமிட்டுப்பார்த்தான். பெருநாளைக்கென்று ஒரு நாளைக்குத்தானே என்று அவர்களுடைய கண்கள் சாடைசெய்தன. முகத்துக்கஞ்சினுன். முகப்பிரீதிக்காக அவர்களைப் பிரியப்படுத்துவதற்காக அதை வாங்கினுன் கையில். கண்ணையும் மூடிக்கொண்டு அதைக் காலிசெய்துவிட்டான் ஒரே இழுவையில்.

விருந்து முடிந்தது. தேனில் வீழ்ந்த தேனீக்கள் போன்று அனைவரும் மகிழ்ச்சிவெள்ளத்தில் ஆழ்ந்தனர், ஆடினர், பாடினர், தாளம்போட்டு ஆனந்தக்கூத்து ஆடினர். ஆடத்தெரியாத அவனையும் பிடித்துப் பாலைவக்கூத்து ஆடினர். ஆனுல், அன்று முகமனுக்காகக் குடித்தவன் அன்று தானே குடிக்கப்பழகினுன். முதலில் ஒரு அரைக்கால், பிறகு கால், அரை முக்கால் பின்னர் தினமும் ஒன்று இரண்டு முழுப்போத்தலுடன் விடுதிக்குத் திரும்பினுன். தானும் குடித்தான், தோழர்களுக்கும் வார்த்துக் குடிக்கக் கொடுத்தான்.

விருந்தின்போது இரண்டொருவர் அவனைச் சுட்டிக்காட்டி, "இந்தப் புதுமாப்பிள்ளை யார்? எங்கே வசிக்கிறவர்" என்று உசாவினர். அவர் ஓர் ஆஸ்திக்காரர், தனவந்தர், தேட்டம் அதிகமுண்டு என்றெல்லாம் அவனைபபற்றி வர்ணிக்கப்பட்டது. இச்செய்தி ஊரில் அடிபடவே வேறு சிலருமவந்து அவனைச் சிநேகிதம் பிடித்தனர். ஆமாம், மரம் பழுத்தால் வெளவாலை வாவென்று கூவி இரந்தழைப்பாரும் இந்த வையகத்தில் உள்ளனரா? கரும்பு கட்டோடிருந்தால் எறும்பு தானே தொடரும் அல்லவா? அவ்வாறே அவனைச் சூழ்ந்த தோழர்களெல்லாம் மெல்ல மெல்ல அவனைச் சுரண்டினர். சூறையாடினர். சூதாடவும் பழக்கினர்.

அம்மட்டா! தனதுகெட்ட தோழர்களின் சகவாசத்தாலே அழகு இராணிகளின் அன்னநடைஅழகினும், வன்னஉடை அழகிலும், சொர்ன ஆபரண அழகிலும், கண்ணைமருட்டும் கருங்கூந்தல் அழகிலும் ஏமாந்தான். அழகு இராணிகளென்று இரவுஇராணிகளைச் சரணடைந்தான். இந்த இரவுஇராணிகளைத் தனக்கு இராணிகளாக்கிக்கொண்டான். அது முதல் அவன் தனது சொந்த விடுதியை மறந்தான். அவர்களின் வீடுகளே அவனுக்கு நிந்தமான விடுதிகளாயின. காமச்சேற்றில் புரண்டான். பாவச் சகதியில் உருண்டான். காமாதுரனென்று நாமம் படைத்தான். அவர்களுக்கெல்லாம் பணம்பணமாக, பவுண் பவுனுக அள்ளிக்கொடுத்தான். மதுபானமும், சூதும், காமமும் அவன்தேடிய செல்வத்தை அழிக்கவந்த கோடரிக் காம்புகள் ஆயின. அவனுடைய முயற்சி வீழ்ந்தது. ஊக்கம்தளர்ந்தது. ஆஸ்திகரைந்துகரைந்து பூச்சியமானது. தேய்பிறை போன்று தேட்டமுழுவதும் சிதைந்து போயின. இப்பொழுது அவனுக்கு முட்டுப்பாடு. பணத்துக்குத் தட்டுக்கேடு. உணவுக்கு வழியில்லை. உறங்க இடமில்லை. அவனது ஏழ்மையான நிலைகண்டு தோழர்களும் நாயும்பேர, தெள்ளும்போவென்று அவனைக் கைவிட்டுப் போயினர். அப்பொழுது புத்தி பிறந்தது. பிறந்தும் என்ன! காலம் பிந்திப்போய் விட்டது. தன் மதியீனத்தை நினைந்து மனம் வாடினுன். அழுது கண்ணீர்சிந்தினுன். பாவிமகன் படுந்துயரம் பார்க்கொணுதாயிற்று.

அவ்வாருக, "பட்டகாலிலே படும்" என்பதற்கிணங்க, அந்த நாட்டிலே ஒரு கடினபஞ்சம் உண்டானது. கஞ்சிக்குக் காற்றுய்ப் பறந்தனர் மக்கள். பலர் நாட்டைவிட்டு வலசைவாங்கினர். பலர் பட்டினியால் உயிர் மாண்டனர். அப்பொழுது நம்முடைய பாவிமகன்பாடு! அவன வறுமையாலும், பசிக்கொடுமையாலும் வாடி அந்நகரிலே உள்ளவன் உடையவன் ஒருவனிடம்போய் அண்டினுன். அவனும் தன்பன்றிகளை மேய்க்கும்படியாக அந்நகரின சுற்றுடலிலுள்ள தன் கிராமத்துக்கு இவனை அனுப்பினுன். அங்குசென்று இவன் பன்றிகளை மேய்த்துவந்தபோதிலும் பஞ்சத்துக்கு ஆண்டியான அவனுடைய பரிதாபகோலம் கண்டு இரங்குவாருமில்லை, உணவளித்துப் பசியாற்றுவாருமில்லை, "அங்கே பன்றிகள் தின்னும் கோதுமைகளால் அவன் தன்வயிற்றை நிரப்ப விரும்பினுலும் அதை அவனுக்கு ஒருவனும் கொடுக்கவில்லை. அப்பொழுது அவன் புத்தி தெளிந்து தனக்குள் யோசித்து, ஆரம்பத்தில் கூறியிருப்பது போன்று, "ஐயோ! நான் இங்கு பசியால் வாடுகிறேன். பன்றிக் கூழுக்கும் வழியின்றிப் பட்டினியால் மாளுகிறேன்." …………தந்தையின் வீட்டுக்குப் புறப்பட்டுச் சென்ருன்.

—வளரும்

---

● ஆஸ்திரேலியாவிலே பிறிஸ்பேண நகரிலே சென்ற 23ஆம் திகதி 62 வயதுடைய சாள்ஸ் பிறெக்ஷோ என்பவர் வாயுக் குழாய் ஒன்று வெடித்தமையால் அவரின் காம் ஒன்று துண்டிக்கப்படலாயிற்று. உடனடியாக அவர் அங்குள்ள றோயல் பிறிஸ்பேண ஆஸ்பத்திரி கொண்டு செல்லப்படவே டக்றர்மார் அவரின் துண்டிக்கப்பட்ட காதலை வெற்றிகாமாக உடலில் பொருத்திவிடலாயினர்.

---

# இல்லமும் இறைவனும்

(எஸ். எம். ஜே.)

இறைவனை வழிபட ஆலயம் அமைத்தனர். சலமோன் அரசன் தலைசிறந்த ஆலயயத்தை ஆண்டவனுக்கு அமைத்தார். பண்டுதொட்டு பற்பல சமயத்தவரும் பிரமாண்டமான கோவில்களையும் ஆலயங்களையும் அமைத்து கடவுளை வழிபட்டு வருகின்றனர். கிறிஸ்தவ உலகில் றோமாபுரியில் உள்ள சம்பேதுரு வானவர் மகா ஆலயம் மகத்துவம் பொருந்தியது. அதற்கு நிகர் அதுவே.

தேவ ஆலயம் கடவுள் வாசஞ்செய்யும் இடம். அங்கே கடவுள் சந்நிதானம் அல்லது பரிசுத்ததலம் மிகவும் பூச்சியமாய் விளங்குகின்றது. ஆலயம் இரத்தக் கறை படியாமல், கொலை நிகழாமல், துர்மார்க்கமான-ஆபாசமான, அவசங்கையான காரியங்கள் இடம் பெருமல் புனிதமாகப் பேணபபடுகின்றன. பௌத்த ஆலயங்களுக்கும், இந்து முஸ்லிம் ஆலயங்களுக்கும் வெறுங்காலாய் பாதணிகள் இன்றிப் பக்தர்கள் செல்வர். ஆலயத்துள் நுழையுமுன் கால்களைக் கழுவிச் செல்ல வேண்டுமென்பது சில சமயத்தவர் மரபு.

இந்துக்கள் ஸ்நானஞ்செய்து உடலைச் சுத்தஞ்செய்துகொண்டுதான் ஆலயத்துக்குப் போவார்கள். வெள்ளிக்கிழமைதோறும் ஆலயம் கழுவிச் சுத்தம் செய்யப்படும். திருவிழாக் காலங்களில் தினமும் கோவில் கழுவப்படும். நமது ஆலயங்களும் புனிதமாகவே பேணப்படுகின்றன. ஏன்? அது இறைவன் உறையும் இடம் என்பதாலேயே. பரிசுத்தர் உறையும் இடம் பரிசுத்தமாய் விளங்கவேண்டியது நியாயமானதே. தூயவர் வாழும் இடம் தூய்மையானதாய் விளங்கவேணடும். மனித அறிவுக்கும் ஞானத்துக்கும் எற்ப அளவிடமுடியாத ஆண்டவனின் மகத்துவத்துக்கு மகிமை கொடுக்கவே வேணடும்.

ஆலயம் இறைவன் உறைவிடமாவதுபோல நமது இலலங்களும் இறைவனின் உறைவிடங்களே. நமது உள்ளக் கோவிலிலே இறைவன் என்றும் இருக்கிருர். நமது ஆன்மா தூய ஆவியானவரின் இல்லம், என்று கூறப்படுகிறது. நமது ஆன்மா புனிதமாயிருந்தால், தூய்மையாயிருந்தால், மாசணுகாது இருந்தால் அங்கு இறைவன் வசிப்பார். நமது உள்ளத்தில் இறைவன் வசிப்பதுபோலவே நமது இல்லத்திலும் இறைவன் வசிப்பார். அங்கே எமது பேராலே இருவரோ,மூவரோ கூடியிருந்தால் அங்கே நாம் இருப்போம் என்ருர் யேசு. ஆகவே கடவுள் சமூகத்தில் ஒன்ருக்கப்பட்ட குடும்பங்கள் கடவுள் சந்நிதானம் என்று கூறினுல் அது பொய்யாகாது. கடவுளின் படைத்தல் தொழிலுக்கு கருவிகளாகிய ஆணும் பெணணும் ஒருங்கே இணையும்பொழுது அது குடும்பமாகிறது. இந்தக் குடும்பத்துக்கும் கோவிலுக்கும் நெருங்கிய ஒற்றுமை—சம்பந்தம் உண்டு. இறைவனது உறைவிடமான ஆலயம் புனிதமாயிருப்பது போல கணவனும் மனைவியும், பிள்ளைகளும் புனிதமாய் இருந்தால், பரிசுத்தம் பரிமளிப்பவராயிருந்தால் அங்கு இறைவன் பிரசன்னமாயிருப்பார்.

பூக்களினுலே பீடத்தை—இறைவன் இருப்பிடத்தை அலங்கரிக்கின்ருேம் அல்லவா? அதுபோல் இல்லற வாழ்விலே புண்ணியங்கள் எனனும் அழகிய மலர்களினுலே அலங்கரித்தால் அங்கு இறைவன் தங்குவார். லீலி மலர்கள் ஆலயத்தை அழகுசெய்கின்றன. கற்பு, ஒழுக்கம், ஒருவருக்கொருவர் பிரமாணிக்கமாய் வாழ்தல் என்பன லீலிமலர்களைப்போன்ற அழகு மலர்களாம்.

ருேசா மலர்களை விரும்பி ஆலயத்துக்குக் கொண்டு செல்வர்; அலங்கரிப்பர். முட்களின் மத்தியில் மலரும் பூ ருேசா. முட் செடியில் அழகிய மலராய் மலர்ந்தது ருேசா. வாழ்க்கையில் முள்போன்ற கஷ்டங்கள், இன்னல்கள் துன்பங்கள் என்பவற்றைப், பொறுமையோடு சகித்து, தாங்கி ஏற்றுக்கொண்டால், கடவுள் சித்தத்தை உணர்ந்து நடந்தால் அப்புண்ணியம் மலர்களின் அரசியான ருேசாவை நிகர்த்ததாகும், புண்ணியங்கள் என்னும் பூக்கள் இல்லத்தில் இருக்குமானுல் ஆண்டவன் அங்கு நிச்சயம் பிரசன்னமாவான். நற்குணமும், நல் ஒழுக்கமும், மக்களை நல்லவர்களாய் வளர்த்தலும், பொறுமை, கடமை, உணர்வு, கண்ணியம், பரஸ்பர அபைு, நல்லெண்ணம், தியாகமனப்பான்மை என்பனவும் நமது இல்லங்களை அலங்கரிக்க வேண்டும். இவை நறுமணங்கமழும் தூபத்தைப்போல் மேல் எழவேண்டும்.

தேவாலயத்திலே இறைவன் பிரசன்னத்தை எமக்கு நினைவுபடுத்தி எச்சரிப்பது போல் ஒரு விளக்கு எப்பொழுதும் எரிந்துகொண்டே இருக்கிறதல்லவா? அதேபோல நமது முன்மாதிரிகை என்னும் விளக்கு இல்லத்தில் ஒளிர்ந்து நம்மைச் சுற்றி உள்ளவர்களுக்கு எச்சரிக்கையாய் இலங்கவேண்டும். கற்பனைகளை அனுசரித்தல், சமயச் சடங்குகள் ஆசாரங்களில் பகுபற்றுதல், ஞாயிறு கடன்திருநாட்களை அனுசரித்தல், பிறருக்கு உதவுதல், தியாகமனப்பான்மை உடையவராய் இருத்தல், கிறிஸ்தவுக்குப் பிரமாணிக்க ஊழியஞ்செய்தல், பிறரன்பு என்பன நம் இல்லங்களில் பரிமளித்து பிறருக்கு எடுத்துக்காட்டாக விளங்கவேண்டும். சாங்கோபாங்கவாழ்க்கை துலங்கவேண்

(தொடர்ச்சி 3-ம் கலம்)

டும். தூண்டாவிளக்காக நமது நல் முன்மாதிரிகை வெளிப்படவேண்டும்.

இறைவனின் ஆலயத்தில் மெழுகுவர்த்தி எரிவதை நாம காண்கிருேம். மெழுகு தன்னை உருக்கி ஒளி கொடுப்பதுபோல நமது பரித்தியாக சிந்தையால், தியாகவாழ்வால் மெழுகுபோல வாழ்வோம். கிறிஸ்தவ புண்ணியங்களால் புடமிடப்பட்டுத் தெய்வீக ஒளியுடையவராய், உலகுக்கு கிறிஸ்துவின் ஒளி கொடுப்பவர்களாய் வாழ்ந்தால் இறைவன் நமது இல்லங்களிலே பிரசன்னமாக இருந்து நம்மை ஆண்டுநடத்தி, அருள்பாலித்து, ஆட்கொள்ளுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவழிபாட்டின் நாள்காட்டி

### ஆவணி — 1970

| | | | |
|---|---|---|---|
| 2 | ஞாயிறு | வருடத்தின் 18-ம் ஞாயிறு | [ப] |
| 3 | திங்கள் | தினப்பூசை | [ப] |
| 4 | செவ்வாய் | புனித சாமிநாதர் | [வெ] |
| 5 | புதன் | தினப்பூசை | [ப] |
| 6 | வியாழன் | மறுரூபம் | [வெ] |
| 7 | வெள்ளி | தினப்பூசை | [ப] |
| 8 | சனி | புனித மேரி வியான் | [வெ] |

*சத்தியவேத பாதுகாவலன்*

# பாதி உடை

சமீபத்தில் மினியுடையைத் தடை செய்வதுபற்றி சில செய்திகள் பத்திரிகைகளில் அடிபடுகின்றன. அது இலங்கையின் பண்பாட்டுக்கு விரோதமானது என்ற காரணத்தினால் அதைத் தடைசெய்யவேண்டும் என்பதுதான் அதை எதிர்ப்பவரின் கூற்று. பண்பாட்டுக்கு மாறானது என்ற காரணத்திற்காக மட்டும் ஒன்றைத் தடைசெய்வது குறுகியமனப்பான்மையாகும். அதனால் வேறு ஏதும் தீமை விளைவதாகவும் இருக்கவேண்டும். மினியுடையால் தீங்கு விளைகிறதா? ஒழுக்கத்திற்குப் பங்கம ஏற்படுகிறதா? இக்கேள்விகளுக்கு விடையை நடைமுறையிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

இவ்வளவு காலமும் மினிக்கு எதிர்ப்பு இல்லாமலில்லை. திருச்சபை அதிகாரிகளும் வேறு பெரியவர்களும் எச்சரித்து வந்தபோதிலும் இளவட்டங்களுள் அநேகர் அதை விரும்பி அணிந்துவந்திருக்கின்றனர். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்வது பெரும்பாலும் பிறரது பாணியை தாமும் பின்பற்றவேண்டும் என்ற எண்ணத்தினாலேயே. அது உடலுக்கு வசதியாக இருக்கிறது என்றோ, செலவுச்சுருக்கமானது என்றோ அதை விரும்புகின்றனர் என்று நாம் கூறமுடியாது. மினியுடை அணிந்தவர் பலர் படும்பாட்டை நேரில் கண்டிருக்கிறோமே. ஏதோ ஒரு பாணியை குருட்டுத்தனமாகப் பின்பற்றுவதுதான் இன்றைய இளைஞர் உலகம், பெண்களின் உடையலங்காரத்தைப் பொறுத்தமட்டில் இது தலைமுறை தலைமுறையாக இருந்துவரும் வழக்கம்.

ஆனால் குருட்டுத்தனமாக உலகம் போகிற போக்கில் போகாமல் தமது அறிவை உபயோகித்து, பெண்மை நலத்தைப்பேணிய அநேக பெண்களை நாம் பாராட்டத்தான் வேண்டும். உண்மையிலேயே தூய்மையின் முக்கியத்துவத்தை உணர்ந்தவர்கள் அதைப் பேணுவதற்கேற்ற அடக்கஒடுக்கமான உடையையே விரும்புவர். பெண்மைக்கு பங்கம் ஏற்படுத்தும் எத்தப் பாணியையும் பின்பற்றமாட்டார்கள்.

எந்தவிதமான உடையலங்காரமும் சில வருடங்களுக்குமேல் நின்றுபிடிப்பதில்லை. மினியுடைக்கும அதேகதிதான். நேரும. சட்டத்தினால் அதைத் தடை செய்தாலும் செய்யாவிட்டாலும் அதன் காலம் இன்னும் நெடுநாள் நீடிக்கப் போவதில்லை என்பது திண்ணம்.

அடுத்தபடியாக வரப்போவது என்ன என்பது தான் இப்போது நாம் சிந்தனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டியது. அது ஒழுக்கத்தைப் பாதுகாக்கவும், பெண்மைக்கு உயர்வளிக்கவும் கூடியதாக விளங்க வேண்டும் என்று எதிர்பார்ப்போம்.

## ரொக்கியோ நகரில் நமது பிரதிநிதிகள்

அண்மையில் ஜப்பான்தேச ரொக்கியோநகரில் நடந்த இரு கத். மகாநாடுகளில் இலங்கைப் பிரதிநிதிகளாக கொழும்பு அதிமேற்றிராசன துணை ஆயர் ஒஸ்வல்ட் கோமிஸ் அடிகளாரும், அகில இலங்கை கத்தோலிக்க சங்கத் தலைவர் திரு: குருகுலசூரியாவும் பங்குபெற்றனர். கோமிஸ் அடிகளார் இலங்கை மேற்றிராணிமாரின் பிரதிநிதியாக ஒற்றுமை இயக்க அபிவிருத்தி மகாநாட்டில்பங்குபெற்றார். திரு.குருகுலசூரியர் பொதுநிலைமக்களின் பிரதிநிதியாக அங்குநடந்த மகாநாட்டுக்குச் சென்றிருந்தார்.

# ‘கிறீஸ்துவ வாழ்வு’

இதன் சுருக்கமான அர்த்தம் எதுவெனில், ஒரு கிறிஸ்தவன் தனது வாழ்வில கிறிஸ்துவைப் பிரதிபலிப்பது, அதாவது, கிறிஸ்துவின் வாழ்க்கையைக்கடைப்பிடித்து. கிறிஸ்து கல்வாரியில் பலியாகியதுபோல் தானும் பீடத்துப் பலியில் பலியாகி, அவரது தெய்வீக கொடையாகிய உத்தானத்தின் தெய்வீக அப்பத்தைப் புசித்து, புது மனிதனாக மாறி விடுவது. இவ்வித மாற்றம் அடைந்தவனது வாழ்வு, அவனது சிந்தனையிலும், சொல்லிலும், செயலிலும், கிறிஸ்துவைப் பிரதிபலிப்பதாக இருக்கும். எவ்வாறெனில், அவனது சிந்தனை எப்போதும் கிறிஸ்துவை மையமாகக் கொண்டு அவனது வாக்கு, நீதியை நவின்று, அவனது கிரிகை, கிறிஸ்து புரிந்த அதே செயல்களைப் புரிவதாய், பிதாவின் சித்தத்தை நிறைவேற்றும் நோக்கம் உடையதாய் இருக்கும். இதுவே கிறிஸ்து நமக்குச் சீவித்துக் காட்டிப்போன கிறிஸ்துவ வாழ்வாகும்.

கிறிஸ்துவ வாழ்வு ஒவ்வொரு கிறிஸ்தவனிலும் மலர வேண்டுமானால், முந்த முந்த அவனது இதய ஆழத்திலிருந்து, அவ்வாழ்வு தூய சிந்தனையாக ஊற்றெடுக்க வேண்டும். “தூய சிந்தனையுடையோர் பாக்கியவான்கள். ஏனெனில், அவர்கள் சருவேசுரனைத்தரிசிப்பார்கள்” என்றார் கிறிஸ்து. ஒவ்வொரு ஆன்மாவினதும் இதயத்தினின்று புறப்படும் சிந்தனையே சொலலாகப் புறப்பட்டு செயலாகக் காட்சியளிக்கிறது. சிந்தனை தூயதாக இருந்தால், அதன் நிறைவாகிய வார்த்தையும், எப்போதும் தூய்மையுடையதாக இருக்கும். புனிதமான வார்த்தைகளைப் பேசுபவன் நற்செயல்களையே புரிவான். இதனைப் பற்றியே தாவீதரசனும் தமது சங்கீதத்தில், “யார் கர்த்தருடைய பர்வதத்தில் ஏறுவான்? யார் அவருடைய பரிசுத்த பர்வதத்தில வாசம் பண்ணுவான்? உத்தமனாய் நடந்து, நீதியை நடப்பித்து, மனதாரச் சத்தியத்தைப் பேசுகிறவனே” என்று பாடுகிறார். இதற்கு மாறாக, தூர்ச்சிந்தையுள்ள மனிதனோடு, தனது தீய எண்ணங்களால அலைக்கழிக்கப்பட்டு, கபடமுள்ள வார்த்தைகளைப் பேசி, அதன் கிரிகைகளாகிய அக்கிரமச் செயல்களையே புரிவான். உதாரணமாக, கிறிஸ்துவினால் புனிதமடைந்த மரியமதலேனம்மாள், தூய சிந்தையுடன் கிறிஸ்துவின் மகிமைக்காக, அவர் பாதங்களில் ஊற்றிப் பூசிய பரிமள தைலம், அவரைக் காட்டிக் கொடுத்த துரோகியான யூதாசின் உள்ளத்தில், பணவாஞ்சையையும், எரிச்சலையும் பிறப்பித்தது. அவ்வித பாவச் சிந்தனை, ‘அதனை விற்றுத் தரித்திருக்குக் கொடுக்கலாமே’ என்று கபடமான, வஞ்சனையான சொற்களாகப் புறப்பட்டது. ஈற்றில் அவனிதயத்தினின்றும் புறப்பட்ட பணவாஞ்சையென்னும் சிந்தனை, அவனைத் தேவ துரோகியாக்கி, முப்பது வெள்ளிக் காசுக்கு ஆசைப்பட்டு, அக்கிரமத்தின் செயலாக, கிறிஸ்துவைக் காட்டிக் கொடுத்து, அவனை நித்திய நரக ஆக்கினைக்கும் பாத்திரவான் ஆக்கியது. ஆனால் தூய சிந்தையுடன், கிறிஸ்துவின் மகிமை விளங்கும்படி, தைலத்தைப் பூசிய மரியமதலேனம்மாளின் செயல், அவளை நித்திய வாழ்வடையப் பண்ணியதும் அன்றி, இவ்வுலகிலேயே உத்தானத்தின் கிறிஸ்துவைத் தரிசிக்கவும், உரையாடவும் வைத்தது. என்னே! தூய இதயமுடையவர்கள் அனுபவிக்கும பாக்கியம்!

— நாதன் —

இவ்வித பாக்கியமான கிறிஸ்துவ வாழ்வை வாழ்வதற்கு, நமது சரீரம இவ்வுலகில் நடமாடினாலும், நமது ஆன்மா, ஒளவுக்கு இவ்வுலகின் லௌகீக வாழ்வுக்கு மரித்து, கிறிஸ்துவுடன் ஒன்றிக்கப் பழகவேண்டும். திவ்விய நற்கருணை வழியாய் இவ்விதம் ஒன்றித்து, தெய்வீக வாழ்வு வாழ, நம் நல்ல தேவன் ஒவ்வொரு ஆன்மாவுக்கும் வழிதிறந்திருக்கிறார். இவ்விதம் வாழத் தொடங்குவதே கிறிஸ்துவ வாழ்வின் ஆரம்பமாகும். மனிதனது மாம்சத்துக்குரிய சரீரம் உலகில் இருக்கும்வரை பசாசும் அவனைப் பலவீனப்படுத்த வழி தேடுவான். ஆயின், கிறிஸ்துவுடன் ஒன்றுபட்ட ஆன்மாவோ, அவ்வித பலவீனத்துக்கு ஆளாகமாட்டாது (1-ம் கொரி. 6-ம் அதி. 17-ம் வச.). “கர்த்தரோடே சேர்ந்திருக்கிறவன் அவரோடே ஒரே ஞானரூபியாய் இருக்கிறான்” என்றார் பரி. சின்னப்பர். இவ்விதம அவருடன் ஒன்றுபட்டுக் கிறிஸ்துவ வாழ்வு வாழ்வதற்கு முழுமனத்துடன், முழு ஆன்மாவுடன், முழுப் பலத்துடன் இறைவனை நேசிக்க வேண்டும். தன்னைப்போல் பிறனையும் நேசிக்க வேண்டும். கிறிஸ்துவின் இந்தஇரு அன்புக் கற்பனைகளாகிய இறையன்பு, பிறர் அன்பு என்ற இரு இறக்கைகளையும கொண்டு, தன் பலங்கொண்ட மட்டும், சிறகடித்து உயரப் பறக்க வேண்டும். இது சுலபமான காரியமன்று. இங்கே தான் சிலுவைகள் குறுக்கிட்டு அவனை உயரப்பறக்க விடாது தடுக்க முன்னிற்கும். இதில் வெற்றி பெறுவதற்கு முதன் முதல் அவன் தன்னை மறக்க வேண்டும். உலகை மறக்க வேண்டும். பின்புதான் அவன் உயரப் பறந்து, கிறிஸ்துவ வாழ்வு வாழமுடியும். இதற்கு வேண்டிய பலத்தைத் தருபவர், பிதாவையும், சுதனையும் ஒன்றுபடுத்தும் அன்பின் ஆவியானவரே! அவரே அவனையும் கிறிஸ்து வழியாகப் பிதாவுடன் ஒன்றிக்கச் செய்கிறார். இவ்வித ஒன்றிப்பே கிறிஸ்தவனைப் புனித நிலையடையச் செய்கிறது. புனிதர்களிடம் மறைந்திருந்து செயல்பட்டு அவர்களை உன்னத பதவிக்கு இட்டுச் செல்வதும் தூய ஆவியானவரின் செயலேயாகும். இவ்வித புனித சினேகத்தினால் கவரப்பட்டு, வாழ்வதே மிக உச்சித நிலையடைந்த கிறிஸ்துவ வாழ்வென்பது (1-ம் கொரி. 8-ம அதி. 3-ம் வச.) “சருவேசுரனை நேசிக்கிறவன் எவனோ, அவன் அவராலே அறியப்பட்டு இருக்கிறான்.” இது புனித சின்னப்பரின் அனுபவ வாக்கு. புனித சின்னப்பர் கிறீஸ்துவால் எப்போ அழைக்கப்பட்டாரோ அன்று தொட்டுஅவர்ஒவ்வொருசிறிய ஏவுதலையும் பெரிதாக மதித்து அவரை அதிகமதிகம் நேசித்து அவரால் அறியப்பட்ட உத்தம அப்போஸ்தலரானார். இவ்விதமாகவே கிறீஸ்துவில் வாழ விரும்புபவனும், அவரைத் திருப்திப் படுத்துவதே தனது ஏக நோபக்கமாகக் கொண்டு அவரது மகிமைக்காகவே வாழ்வான். தன்னை இடையறாது ஏவிக்கொண்டிருக்கும் தூய ஆவியானவரின் உதவியால் “உமது இராட்சியம் வருக” என்று செபித்து, உண்மையான அப்போஸ்தலனாக மாற்றம் அடைகிறான். கிறீஸ்துவுக்குப் பணிசெய்வதே தனது முதற்கடமையென்று உணருகிறான். அவனது உதாரகுணம் திருச்சபைப் பணிகளையும் தனது சொத்தப் பணியாக மதிக்கச்செய்கிறது. இதுவே துறவிகள் முதல் பொது நிலையினர் ஈறாகக் கடைப்பிடித்துவரும் கிறீஸ்துவ வாழ்வு.

## ஒவ்வொரு மனிதனும் நம் சகோதரனே

பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசரின் அயரா முயற்சியால் வருடத்தின் முதலாம் நாளாகிய தைமாசம் 1-ம் திகதி உலக சமாதான தினமாகச் சில காலமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. தற்போது ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனம் உலகின் சில பகுதிகளில் தலைகாட்டி நிற்கும் இனவெறியை களைந்தெறிய முயற்சிகள் எடுத்து வருகின்றது. அம்முயற்சிகளுக்கு ஆதரவு அளிக்கும் நோக்கத்துடன் 4-வது முறையாகக் கொண்டாடப்பட இருக்கும்1971-ம் ஆண்டு உலக சமாதான தினத்தின் கொண்டாட்டங்களின் விருது வாக்கியமாக “ஒவ்வொரு மனிதனும் நம் சகோதரனே” என்னும் கூற்றை உபயோகிக்க முடிவு செய்யப்பட்டிருக்கின்றது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. சீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 970ஆம் ஆ. ஆவணி 1ஆம் உ சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி : “கதலிக் பிறஸ்” யாழ்ப்பாணம். தொலைபேசி : 300 தாபிதம் 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org